Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, CrPC)
IN THE COURT OF ADDITIONAL ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | |
|---|---|---|
| Sessions Case No. | | 34/2026 |
| Depositions of Witness for Prosecution Defence Court | | அ.சா.1 |
| Name | : | திரு. செந்தில்குமார் |
| Father's/Husband Name | : | லட்சுமணன் |
| Village | : | வெப்படை |
| Taluk | : | குமாரபாளையம் |
| Calling | : | உதவி ஆய்வாளர் |
| Age | : | 42 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 01.07.2026 | | |

அ.த.சாட்சி– ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

1. நான் தற்பொழுது வெப்படை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.06.2023 ஆம் தேதி அன்று திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றிய பொழுது அன்றைய தினம் காலை5.30 மணி அளவில் நான் அலுவலில் இருந்த பொழுது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் நான் மற்றும் தலைமை காவலர் 466 செல்வம் மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தனலட்சுமி ஆகியோருடன் மொளசி காவல் நிலைய சரகம் அம்மாசிபாளையம் சண்முகம் என்பவருடைய தோட்டத்தின் அருகே ரோந்து செய்து கொண்டிருந்த பொழுது அங்கு நின்று கொண்டிருந்த ஒரு நபர் ஒரு பிளாஸ்டிக் பேரலை குச்சியால் கலக்கிக் கொண்டிருந்தார். அவர் எங்களை கண்டவுடன் அங்கிருந்து ஓட முயற்ச்சி செய்தவரை சுற்றி வளைத்து பிடித்து அவரைப் பற்றி விசாரிக்க அவர் பெயர் சண்முகம் என்றும் தந்தை பெயர் அம்மாசி என்றும் கூறினார். மேலும் அவரை விசாரித்ததில் அவர் சட்டத்திற்கு புறம்பாக விஷ நெடியுடன் கூடிய கள்ளச்சாராயத்தை தயாரித்ததும் மேலும் கள்ளச்சாராயர் ஊரலை தயாரித்து வைத்திருந்ததை ஒப்புக்கொண்டவரை அவரிடம் குற்றத்தின் தன்மையை எடுத்துரைத்து அன்றைய தினம் காலை 6.15 மணிக்கு கைது செய்து துன்புறுத்தல் இன்றியும் ஆசை வார்த்தை இன்றியும் அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தினை 6.30மணி அளவில் முதல் 7.15 மணியளவில் பதிவு செய்து அவரிடம் விசாரணை செய்ததில் அவர் கள்ளசாராயம் தயார் செய்ததும் அதில் போதை அதிகமாக ஊமத்தை விதைகளை அரைத்து அதில் கலந்ததை ஒப்புக்கொண்டு அதனை எடுத்து ஆஜர் செய்தார் சுமார் 100 லிட்டர் பிடிக்கக்கூடிய பேரலில் 55 லிட்டர் கள்ளசாராயம் இருந்தது மேலும் 200 லிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு பேரல்கள் சுமார் 400 லிட்டர் ஊறல் இருந்தது பின்னர் அதை 7.35 மணி முதல் கைப்பற்றி அதில் இருந்து 750 மில்லி லிட்டர் பிடிக்கக்கூடிய. இரண்டு கண்ணாடி பாட்டில்களில் ரசாயன பரிசோதனைக்காக சுமார் 500 மில்லி லிட்டர் எடுத்து வெள்ளை துணையால் சுற்றி

எஸ். ஹெச்.ஓ.சீல் வைத்தேன். பின்னர் மீதம் இருந்த கள்ளச்சாராயத்தினையும் கள்ளச்சாராய ஊரலையும் காலை சுமார் 8.35 மணியளவில் அழித்தல் மகசார் மூலமாக அழித்தேன். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் திருச்செங்கோடு மதுவிலக்கு காவல் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்491/2023 பிரிவுகள்4(1) (aa) 4(1) (g)4(1–A) படி எதிரி சண்முகம் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்னர் மேற்படி முதல் தகவல் அறிக்கையை குமாரபாளையம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் அதன் நகல் ஒன்றை காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு மேல்விசாரணைக்காக சமர்ப்பித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவலை அறிக்கையானது நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை ஆகும். மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கைப்பற்றுதல் மகசருடன் அடங்கிய அளித்தல் மகசர் அடங்கிய ஆவணம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு 750 மில்லி லிட்டர் பிடிக்கக்கூடிய பாட்டில்களில் தான் மாதிரி காண கள்ளச்சாராயத்தனை எடுத்தேன். மேற்படி பாட்டில்கள் இரண்டும் **அ.ச.பொ.1மற்றும்2ஆககுறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:–**

1. நான் சம்பவ இடத்திற்கு சென்ற பொழுது ஆஜர் எதிரி அங்கு இல்லை என்றால் சரியல்ல. எங்களை கண்டவுடன் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார். அவ்வாரெனில் என்னுடைய முதல் விசாரணையில் ஆஜர் எதிரி தலைமறைவு எதிரி என்று கூறி இருப்பது தவறு என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. ஒரு பொருளிலிருந்து வரும் வாடையின் அடிப்படையில் அந்த பொருள் கள்ளச்சாராயம் என்றோ அல்லது மதுபானம் என்றோ கூற இயலாது என்றால் சரிதான். மேற்படி பொருளிலிருந்து வந்த விஷ நெடியின் காரணமாக ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. சம்பவ இடத்தில் இருந்து தான் நாங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு புகைப்பட ஆவணம் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பேரல்கள் எந்த வடிவத்தில் இருந்தது என்று நிரூபிப்பதற்கும் எவ்வித ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல கைப்பற்றுதல் மகஜர் அழித்தல் மகசர்தயார் செய்துள்ளோம். அறிவியல் பகுப்பு ஆய்வுக்கு அனுப்புவதற்கு முன்னரே கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பொருள் கள்ளச்சாராயம் என்று எதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் என்னுடைய விஷவாயு நெடி வந்ததால் என்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் கூறுகிறேன். அனுபவத்தின் அடிப்படையில் தீர்மானம் செய்வதற்கு எங்களுடைய துறையில் எனக்கு அதிகாரம் உள்ளதா என்றால் இல்லை .

2. மதுபான சட்டத்தின்படி போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரின் படியும் மதுபானங்களை கைப்பற்ற செல்வதற்கு சில விதிமுறைகள் உள்ளது என்றாலும் எதன் அடிப்படையில் நான் சம்பவத்தை அன்று சென்றேன் என்றால் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நான் கண்காணிப்பு பணிக்கு சென்றேன். சம்பவ இடத்திற்கு நான் சீருடையின் சென்றேனா அல்லது சீருடை இல்லாமல் சென்றேனா என்றால் சீருடை இல்லாமல் சென்றேன். அவ்வாறு கண்காணிப்பு பணிக்கு செல்லும் பொழுது குற்ற நிகழ்வு நடைபெற்றிருந்தால் சம்பவ இடத்தின் அருகில் இருப்பவர்களிடம் தான் சாட்சிகளாக கையொப்பம் பெற வேண்டும் என்றும் சாட்சிகளாக போட வேண்டும் என்றும் போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் உள்ளது என்றால் பொதுநபர் சாட்சிகள் யாரும் முன் வராததால் போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். சம்பவ இடமானது கத்திரிசெடிகள் இருந்த தோட்டமாகும். சம்பவத்தின் அருகே விவேகானந்தர் என்பவருடைய தோட்டம் அமைந்துள்ளது என்றால் அது எனக்கு நினைவில்லை. நான் சாட்சி மடிப்பது போன்று உண்மையில் சம்பவம் நடைபெற்று இருக்குமேயானால் அருகில் இருந்த தோட்டத்தின் உரிமையாளனான விவேகானந்தரிடம் சாட்சி கையொப்பம் பெற்றிருப்பேன் என்றால் அந்த சமயத்தில் அந்த இடத்தில் யாரும் இல்லை. நான் சம்பவ இடத்தை சென்றே பார்வையிடாததால் தான் அருகில் யாரும் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நுகர்ந்து பார்த்தவுடன் எதன் அடிப்படையில் அது சாராயம் என்று கூறுகிறேன் என்றால் என்னுடைய பணிக்கான அடிப்படையில் பல்வேறு இடங்களுக்கு ரோந்து சென்று இதுபோன்று சாராயங்களை பிடித்துள்ள வகையில் மேலும் அவற்றை ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி அவை சாராயம் என்று முடிவு செய்யப்பட்டதால் அதன் அடிப்படையில் கூறுகிறேன்.

3. பரிசோதனைக்கு அனுப்புவதற்கு முன்னரே கைப்பற்றப்பட்ட பொருளானது விஷ சாராயம் என்று நான் கூறுவது வழக்கிற்காக கூறுவது என்றால் சரி அல்ல. ரகசிய தகவல் எந்த இடத்தில் இருந்து எனக்கு கிடைத்தது என்றால் அதை தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ரகசிய தகவல் கிடைத்த இடத்திற்கு சம்பவ இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்றால் நான் காவல் நிலையத்தில் இருந்த

பொழுது தான் ரகசிய தகவல் கிடைத்தது. ரகசிய தகவல் கிடைத்தவுடன் நான் காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி சென்றேனா என்றால் மேற்படி ரகசிய தகவலை உறுதி செய்து என்னுடைய உயர் அதிகாரிகளிடம் உத்தரவு பெற்ற பின்னர் தான் சென்றேன். எங்களுடைய காவல் நிலையத்தில் நாங்கள் என்ன பணிக்காக செல்கிறோம் என்று குறிப்பிட வேண்டிய (ஜிடி) பொது நாட்குறிப்பில் குறித்து வைத்துவிட்டு சென்றேனா என்றால் சென்றேன். அந்த பொது நாட்குறிப்பிற்குரிய ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் சம்பவ இடத்தை சுற்றி என்னென்ன உள்ளது என்றால் சம்பவ இடத்தின் நான்கு திசைகளிலும் தோட்டம்தான் இருந்தது. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் நான் சாட்சியம் அளிப்பது போன்று சொன்ன விதத்தில் சம்பவ இடத்திலிருந்து எவ்விதமான பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை எத்தனை மணிக்கு சென்றடைந்தேன் என்றால் காலை 5.30 மணிக்கு சென்றடைந்தேன். நானும் தலைமை காவலர் செல்வம் மற்றும் சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் ஆகியோர் சென்றோம். மூவரும் இருசக்கர வாகனங்களில் சென்றோம். நான் ஒரு இரு சக்கர வாகனத்திலும் அவர்கள் இருவரும் மற்றொரு இரு சக்கர வாகனத்திலும் சென்றோம். நாங்கள் மூவரும் சம்பவ இடத்திற்கு செல்லும் பொழுது ஏதாவது எடுத்துச் சென்றோமா என்றால் மடிக்கணினி எடுத்துச் சென்றோம்.

5. பரிசோதனைக்காக கள்ளச்சாராயம் மாதிரிகளை இரண்டு கண்ணாடி பாட்டில்களில் சேகரித்ததாக என்னுடைய முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேலும் அவற்றை வெள்ளை துணையால் மூடி எஸ்.எச்.ஓ.சீல் வைத்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அப்பணியினை எவ்வாறு செய்தேன் என்றால் என்னுடன் இருந்த காவலர்களை அருகில் உள்ள இடத்திற்கு அனுப்பி பாட்டில்களை எடுத்து வர செய்தேன். என்னுடன் இருந்த காவலர்களை அனுப்பி பாட்டில்களை எடுத்து வர வைத்தேன் என்று என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் இவ்வழக்கினை எதிரிக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. என்னுடைய முதல் விசாரணையில் சாட்சியம் அளித்து இருப்பது போன்று சம்பவ இடத்திலிருந்து ஊமத்தங்காய் எதையும் கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை ஆனால் எதிரி அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஊமத்தங்காயை அரைத்து சாராயத்தில் கலந்து விட்டதாக தெரிவித்தார். பணி சம்பந்தமாக பரிசோதனைக்கு செல்வதற்கு வேறு எந்த பொருட்களையும் எடுத்து செல்வதற்கு போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் குறிப்பிடபட்டுள்ளதா என்றால் மதுவிலக்கு குற்றங்களை பொறுத்தவரைஎந்த பொருட்களையும்எடுத்துச் செல்ல

வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. பரிசோதனைக்கு செல்வதற்கு முன்னர் எங்களுடைய மேல் அதிகாரிகளிடம் ஒப்புதல் வாங்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தகவல் தெரிவித்து விட்டு தான் சென்றோம். சம்பவ இடத்திற்கு நாங்கள் செல்வதற்கு எந்த உயர் அதிகாரி ஒப்புகை கொடுத்தார் என்ற விபரத்தை இவ்வழக்கில் எங்கும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரி இடம் பெற்றதாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தினை அவரை அச்சுறுத்தி பெறப்படவில்லை என்று நிரூபிப்பதற்கு என்ன சாட்சியம் உள்ளது என்றால் ஒப்புதல்வாக்கு மூலத்தில் எதிரியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

7. நான் சாட்சியமளிப்பது போன்று சொன்ன விதத்தில் எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. காவலர்களாகிய நாங்கள் அனைவரும் சேர்ந்து எதிரி அளித்ததாக கூறி ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ரகசிய தகவல் அளிப்பவர்களின் பாதுகாப்பு கருதி அவர்கள் குறித்த விபரமோ எங்கிருந்து வந்தது என்று குறிப்பிட்டு கூறப்படுவதில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் இருந்து எட்டடி தூரத்தில் மண் சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தின் தெற்கு திசையில் பழனிச்சாமி என்பவருடைய வீடு உள்ளது என்றால் வீடு உள்ளது ஆனால் வீட்டின் உரிமையாளர் பெயர் எனக்கு தெரியாது.

**8.** சம்பஇடத்திற்கே செல்லாமல் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அளித்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் காவல் அதிகாரி கையொப்பம் செய்யக்கூடாது என்பது போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் ஒரு விதி என்றால் அது எனக்கு தெரியவில்லை. எதிரி கொடுக்கப்பட்டதாக கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடம் கையொப்பம் பெற்று நாங்களாக தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. **நான்** சாட்சியம் அளிப்பது போன்று சொன்ன நேரத்தில் சொன்ன சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்று தெரிந்து கொண்டேன் என்றால் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பொழுது தனக்கு மது அருந்து பழக்கம் உள்ளதாக கூறினார். எதிரிக்கு மது அருந்து பழக்கமே இல்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் பொழுது அவருக்கு மது அருந்து பழக்கம் உள்ளதாக கூறினார் என்று சாட்சியம் அளிப்பது பொய் என்றால் சரியல்ல. எதிரி பட்டியல் இனத்தைச் சார்ந்தவர் என்பதால் பல பேர் தூண்டுதலின் பெயரில் அவருக்கு எதிராக பொய்யாக வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக பொய்யான சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை தயார் செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2026.08.19 18:14:25 +0530

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, CrPC)
IN THE COURT OF ADDITIONAL ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | |
|---|---|---|
| Sessions Case No. | | 34/2026 |
| Depositions of Witness for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name | : | திருமதி.தனலட்சுமி |
| Father's/Husband Name | : | வல்லரசு |
| Village | : | ராசிபுரம் |
| Taluk | : | ராசிபுரம் |
| Calling | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 53 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 01.07.2026 | | |

அ.த.சாட்சி 2– ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

நான் தற்பொழுது ராசிபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 22.6.2023 ஆம் தேதி அன்று மதுவிலக்கு அமல் பிரிவு திருச்செங்கோட்டில் பணியாற்றிய பொழுது அன்றைய தினம் காலை 5.30 மணி அளவில் நிலைய பொறுப்பில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காவல் உதவி ஆய்வாளர், நான் மற்றும் தலைமை காவலர் செல்வம் ஆகியோர் காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி மொளசி காவல் நிலைய சரக அம்மாசிபாளையம் சண்முகம் என்பவரது தோட்டத்தின் அருகே காலை சுமார் 6 மணி அளவில் கண்காணித்து சென்ற பொழுது 100 லிட்டர் கொண்ட சாராய ஊரல் 55 லிட்டர் கேனில் இருந்தது. 6:15 மணியளவில் சண்முகம் என்பவரை கைது செய்து பின்பு 6:30 மணி முதல் 7.15மணி வரை வாக்குமூலம் தயார் செய்து பின்பு ஏழு முப்பது முதல் 8.30 வரை 750ml கொண்ட இரண்டு பாட்டில் 500ml அளவு விசா சாராயத்தினை எடுத்து எஸ் எச்ஓசி வைக்கப்பட்டது 8.35 முதல் 9.30 வரை 200 அளவு கொண்ட இரண்டு பேரல்கள் 400 லிட்டர் சாராய ஊரல் கொட்டி அளிக்கப்பட்டது பின்பு எதிரியை 10.15 மணியளவில் கைது செய்து நிலையம் வந்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடத்திற்கு நாங்கள் மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றதாக ஆசா 1 சாட்சியம் அளித்து இருப்பது சரியா என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு செல்லும் பொழுது சம்பவம் இடத்தில் உள்ள சாட்சிய பொருட்களை சேகரிப்பதற்கு எவ்வாறு செல்ல வேண்டும் என்றும் நாங்கள் என்னென்ன பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 என்னுடைய உயர் அதிகாரி என்பதால் அவருடைய சாட்சியத்திற்கு ஒத்துசாட்சியமளிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. கைப்பற்ற பொருளானது சாராயமா அல்லது கள்ளச்சாராயமா என்று நுகர்வின் மூலம் தீர்மானிப்பதற்கு எனக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல பணிக்கால அடிப்படையில் எங்களுக்கு அது தெரியும். சம்பவதினத்தன்று நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்பதை நிரூபிப்பதற்கு என்னுடைய நாட்குறிப்பினை என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அது காவல் நிலையத்தில் தான் உள்ளது. நான் சாட்சியம் அளிப்பது போன்று சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன தினத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சம்பவஇடத்தில் இருந்து நான் கைப்பற்றியதாக கூறப்படும் எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

3. நான் சாட்சியம் அளிப்பது போன்று சொன்ன விதத்தில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1என்னுடைய உயர் அதிகாரி என்பதால் அவருக்கு சாதகமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றான் சரியல்ல. எதிரிக்கு எதிராக என்னுடைய முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எதிரிக்கு எதிராக பொய்யாக கூறப்பட்டவை என்றான் சரியல்ல.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2026.08.19 18:14:31 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, CrPC)
IN THE COURT OF ADDITIONAL ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | |
|---|---|---|
| Sessions Case No. | | 34/2026 |
| Depositions of Witness for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.3 |
| Name | : | திரு. செல்வம் |
| Father's/Husband Name | : | சுப்ரமணி |
| Village | : | வையப்பமலை |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 49 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 01.07.2026 | | |

அ.த.சாட்சி 3– ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.
எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் தற்பொழுது திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.06.2023 ஆம் தேதி அன்று திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணியாற்றிய பொழுது அன்றைய தினம் காலை 5.30 மணி அளவில் நிலைய பொறுப்பில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காவல் உதவி ஆய்வாளர், நான் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி. தனலட்சுமி ஆகியோர் காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி மௌளசி காவல் நிலைய சரக அம்மாசிபாளையம் சண்முகம் என்பவரது தோட்டத்தின் அருகே வந்த பொழுது காலை 6 மணி அளவில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் 100 லிட்டர் அளவுள்ள பேரலில் குச்சியை வைத்து கலக்கிக் கொண்டிருந்தார். போலீசார் ஆகிய எங்களை கண்டவுடன் ஓட முயற்சித்த வரை போலீஸ் பார்ட்டி சகிதம் பிடித்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக கூறியவர் பின்னர் தன்னுடைய பெயர் சண்முகம் வயது 51 தந்தை பெயர் அம்மாசி என்று கூறினார். அவரிடம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு தான் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாகவும் அதற்கு உண்டான கள்ளச்சாராய ஊரலையும் வைத்திருப்பதாக கூறி அவரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி 6.15 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் அவரை கைது செய்தார்.

2. பின்னர் 6.30 மணி முதல் 7.15 மணி வரை எதிரி தாமாக முன்வந்து கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்து அதில் நானும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி தனலட்சுமி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம். பின்னர் 7.30 மணியிலிருந்து 8.30 மணி வரை எதிரி ஆஜர் செய்த 100 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் கேன்களில் 55 லிட்டர் அளவுள்ள கள்ளச்சாராயம் இருந்ததை எடுத்து ஆஜர் செய்ததை பிளாஸ்டிக் கேன் மூடியை திறந்து பார்த்தபொழுது விஷ நெடியுடன் கூடிய வாடை மற்றும் கண் எரிச்சல் மற்றும் குமட்டல் ஏற்பட்டதால் என்ன காரணம் என்று அவரைக் கேட்டதற்கு அதிக போதை தருவதற்காக ஊமத்தங்காயை அரைத்து அதன் சாற்றை அதில் கலந்ததாக கூறினார். பின்னர் அவர் ஆஜர் செய்த 200 லிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு பிளாஸ்டிக் பேரல்களில் இருந்து 400 லிட்டர் கள்ளச்சாராய ஊரலையும் என்முன்னிலையிலும் மற்றும் என்னுடன் வந்த தனலட்சுமி என்பவர் முன்னிலையிலும், எதிரி ஆஜர் செய்ததை உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரி ஆஜர் செய்த கலாச்சாராயத்திலிருந்து 750 மில்லி லிட்டர் அளவுள்ள இரு கண்ணாடி பாட்டில்களில் தலா சுமார் 500 ml அளவிலானவற்றை ரசாயன பகுப்பாய்விற்காக எடுத்துக் கொண்டார். மேற்படி இரு பாட்டில்களையும் மூடி எஸ்.ஹெச்.ஓ சீல் வைத்தார். பின்னர் காலை 8 35 மணியிலிருந்து 9:30 மணி வரை மீதமுள்ள கள்ளச்சாராயத்தையும் கள்ளச்சாராய ஊரளையும் சம்பவ இடத்திலேயே கொட்டி அளித்தார் . அங்கிருந்து தடயங்களுடன் நிலையம் வந்து 10.15 மணிக்கு நிலைய குற்ற எண் 491 / 2023 பிரிவுகள்4(1) (aa) 4(1) (g)4(1–A)டி படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். 03.07.2023 ஆம் தேதி அன்று காவல் ஆய்வாளர் அவர்கள் உத்தரவுப்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை குமாரபாளையம் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவின் பெயரில் தபால் பெற்று சேலம் தடையியல் அறிவியல் ஆய்வகத்திற்கு சென்று ஒப்படைத்தேன். மேற்படி காவல் ஆய்வாளர் நீதித்துறை நடுவர் முன்னிலையில் சமர்ப்பித்தவேண்டுகோள் கடிதம் மேலும் மேற்படி வேண்டுகோள் கடிதத்தின் பெயரில் வழக்கு சொத்தினை ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்புவதற்கு வழங்கப்பட்ட அனுமதி ஆகியவை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரசீது பெற்று அதனை நிலையம் வந்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடத்திற்கு நாங்கள் மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றதாக அ.சா. 1 சாட்சியம் அளித்து இருப்பது சரியா என்றால் சரிதான். ரசாயன பகுப்பாய்விற்கு சாராயத்தை எடுப்பதற்கு பாட்டிலை எங்கிருந்து வாங்கி வந்தேன் என்றால் அருகில் இருந்த வீட்டில் இருந்து வாங்கி வந்தேன். அந்த வீட்டில் இருந்த நபரின் பெயர் எனக்கு தெரியாது என்றால் அருகில் இருந்த ஊருக்கு சென்று வாங்கி வந்தேன். சம்பவ இடத்திற்கு செல்லும் பொழுது சம்பவம் இடத்தில் உள்ள சாட்சிய பொருட்களை சேகரிப்பதற்கு எவ்வாறு செல்ல வேண்டும் என்று நாங்கள் என்னென்ன பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில்

குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 மற்றும் 2 என்னுடைய உயர் அதிகாரி என்பதால் அவருடைய சாட்சியத்திற்கு ஒத்துசாட்சியமளிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. கைப்பற்றப்பட்ட பொருளானது சாராயமா அல்லது கள்ளச்சாராயமா என்று நுகர்வின் மூலம் தீர்மானிப்பதற்கு எனக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. பணிகால அடிப்படையில் எங்களுக்கு அது தெரியும். சம்பவதினத்தன்று நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்பதை நிரூபிப்பதற்கு என்னுடைய நாட்குறிப்பினை என்னால் தாக்கல் செய்ய இயலும் என்றால் அது காவல் நிலையத்தில் தான் உள்ளது. நான் சாட்சியம் அளிப்பது போன்று சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன தினத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் இருந்து நான் கைப்பற்றியதாக கூறப்படும் எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

3. அழிக்கப்பட்டதாக கூறப்படும் சாராயத்திலிருந்து தான் ரசாயன பகுப்பாய்விற்கு சாராயம் எடுக்கப்பட்டது என்பதற்கு எவ்வித ஆவணமும் கிடையாது என்றால் . சரியல்ல யாருடைய உத்தரவின் பெயரில் பொருட்கள் அளிக்கப்பட்டது என்பதை நிறுவிப்பதற்கு சாட்சிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரி உத்தரவின் பெயரில் அளித்தோம். எங்களுடைய உயர் அதிகாரி எப்பொழுது உத்தரவிட்டார் என்பதற்கும் ஆவணம் எதுவும் இல்லை என்றால் காவல் உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். மதுவிலக்கு வழக்குகளில் விசாரணைக்கு செல்லும் பொழுது அதற்கு உட்பட்ட அதிகாரிகளிடம் உத்தரவு பெற்று தேவையான பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4. அவ்விவரம் தெரிந்திருந்தும் அருகில் இருந்த நபரிடமிருந்து பாட்டிலை வாங்கி வந்து பகுப்பாய்விற்கு வழக்கு சொத்து சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது என்று சாட்சியம் அளிப்பதில் இருந்தே வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியம் என்பது தெரிய வருகிறது என்றால் சரியல்ல. அ.சா.1,2 ஆகியோர் காவல் துறையை சார்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் ஆஜர் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து நாங்களாக தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2026.08.19 18:14:37 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.